இருக்கிறது. அதுபற்றி அவர்கள் மத்திய அரசோடு என்னென்ன தொடர்பு கொள்ளவேண்டும், என்னென்ன தேவைகள் என்று நம்மிடம் தெரிந்து கொள்கிருர்கள். ஆக, விவரங்கள் பரிமாறப்படுகின்றன. வேறு சட்டபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதில்லே.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : வினு எண் 200.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir, I want the House to get into the question again. The question is whether the Hon. Minister had held discussion. Mr. Martin never asked whether the Hon. Minister had conducted any negotiation or transacted any other thing. But the Hon. Minister was giving an answer in the 'negative' for the first question. That means the Hon. Minister had not held any discussion.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : ....தமிழக அரசின் ஒன்றிரண்டு திட்டங்களுக்கு இங்கிலாந்தின் உதவி வேண்டும் என்று கேட்கப்பட்டதா ?..............என்பதுதான் வினு.

THIRU K. VINAYAKAM : I am having the English version of the question. The question was whether he had held any discussion. No question of negotiation or anything arises. So, what was the discrepancy in the question? Why should the Hon Minister give an answer in the 'negative'?

MR. SPEAKER : Please see clause (b). The hon. Member Thiru Martin has asked whether aid for a few schemes of Government of Tamil Nadu was sought for from England.

THIRU K. VINAYAKAM : He has answered in the negative and that means he had not held discussion. But I saw his photo with the Lady Minister in the '*Hindu*'.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வியின் முதல் பகுதிக்கு "ஆம்" என்று சொல்லியிருக்கிறேன். விளக்கமும் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : துணேக் கேள்வி கேட்கும் போது "நாம் உதவி கேட்கவில்லே, அவரோடு பேசினேம்" என்று தான் சொல்லியிருக்கிருர்கள். இதில் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது ?

தடப்பள்ளி இராச வாய்க்கால்

* 200 வினு—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் உள்ள தடப்பள்ளி இராச வாய்க்காலேப் புதுப்பிக்கும் (re-modelling) செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இக்கால்வாயின் மதகுகளைப் புதுப்பித்தல், தடுப்புச் சுவர் கட்டுதல், இணைப்பு நில வாய்க்கால் வெட்டுதல் ஆகிய புதுப்பித்தல் வேலைகளுக்கான வரைபடங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப் படுகின்றன. இவை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவாக்கப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்த இராஜா வாய்க்காலை புதுப்பிப்பதால் மேலும் அதிகமான நீர்ப்பாசனம் செய்யலாம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த வாய்க்கால் பவானி ஆற்றின் குறுக்கே உள்ள கொடிவேரி அணைக்கட்டிலிருந்து வலதுபுறமாக பாய்கிறது. இதனல் 18,444 ஏக்கர் நிலங்கள் பயன் அடைகின்றன. கடைகோடி நிலங்களுக்கு தண்ணீர் பற்றுக்குறை இருப்பதால் இவ்வாய்க்காலை புதுப்பிக்கும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அந்த வாய்க்காலில் ஏற்கனவே இவ்வளவு கியுசெக்ஸ் தண்ணீர் விடவேண்டும் என்னும்படியான ஒப்பந்தம் இருக்கிறது. அந்த ஒப்பந்தப்படி தவறுமல் பாசனத் திற்கு தண்ணீர் விடப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றிய விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. க. ர. நல்லசிவன் : பாசனம் வேண்டிய அளவுக்கு சீர்ப்படுத்திக் கொடுக்க அரசாங்கம் திட்டம் தீட்டி இருக்கிறதா ? அந்த திட்டம் எப்போது செயல்படும் என்று தெரிவிக்க வேண்டு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் திட்டத் திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் 2-3 மாதங் களில் முடிவாக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

கும்மங்குடி—பேரையூருக்குப் பாசன வசதி

* 201 வின—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டைப் பகுதி யில் ஓடிக்கொண்டிருக்கும் வெள்ளாற்றிலிருந்து கும்மங்குடி—பேரை யூரை அடுத்துக் கால்வாய் வெட்டி நமனசமுத்திரம் பெரிய கண் மாயிலிருந்து முனை சந்தைக்கண்மாய் வரைக்கும் தண்ணீரைப் பாய்ச்சி நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தச் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இந்த மாதிரி திட்டம் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.